# அம்தோ ரொங்பா (Amdo, Rongba)




**வசிப்பிடம்:** கி.பி. 1987ன் ஓர் அறிக்கை 97,600 ரொங்பா அம்தோ மொழி பேசும் மக்கள் கிழக்கிலுள்ள சிங்ஹாய் மாநிலத்தில் வசிப்பதாகக் காட்டுகிறது. இப்பகுதியின் பெரும்பாலான நகரப்பகுதிகளில் ஹான் சீனர்கள் மற்றும் முகமதியர்கள் வசிக்கின்றனர். ரொங்பா அம்தோ மக்களோ நாடோடி வாழ்க்கை நடத்தி கிராமப்புறங்களில் வசிக்கின்றனர். ரொங்பா அம்தோ மக்களின் முக்கியமான வசிப்பிடம் ஹூய் (Hui) முகமதியர்களின் தன்னாட்சி மாவட்டமாகிய ஹுஅலோங்(Hualong) மற்றும் ஷலர் (Salar) சிறுபான்மையினரின் அங்கத்தினரால் பகுதியாக நிர்வகிக்கப்படும் ஷுன்ஹா (Xunhua) மாவட்டங்களாகும்.

**அடையாளம்:** ரொங்பா அம்தோ மக்கள் திபெத்தியர்கள் ஆவார்கள். ரொங்பா என்பதின் பொருள் திபெத்திய மொழியில் "கிராமவாசி அல்லது விவசாயி" ஆகும். கம்யூனிஸ்டுகள் கி.பி. 1950 ல் முழுத் திபெத்தை ஆக்கிரமிக்கும்போது ஆயிரக்கணக்கானத் திபெத்தியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதைப்பற்றிய அதிகாரப்பூர்வமான சீனப் பதிவேடு குறிப்பிடும்படியாகவும் வித்தியாசமாகவும் பின்வருமாறு உள்ளது "இந்தக் கிளர்ச்சிகள் பிற்போக்கான திபெத்திய சக்திகளின் அழிவைத் தூண்டியது மற்றும் திபெத்தை எதிர்பார்த்ததைக் காட்டிலும் வேகமாகப் பிரகாசமான மக்களாட்சி மற்றும் பொது உடைமை வாதத்தின் பாதைக்குள் கொண்டுவந்தது."

**மொழி:** ரொங்பா அம்தோ மொழி இரண்டு வட்டார மொழி வழக்குகளை உடையது மற்றும் மற்றெல்லாத் திபெத்திய மொழிகளைக் காட்டிலும் அதிகமாகச் சீன வார்த்தைகளைக் கடனாகப் பெற்றுள்ளது. ரொங்பா மொழி மற்ற மூன்று அம்தோ மொழி பேசுபவர்களால் ஓரளவு மட்டுமே புரிந்துகொள்ள முடியும் ஆனால் எல்லாத் திபெத்தியர்களும் ஒரே எழுத்தைப் (Script) பயன்படுத்துகின்றனர்.

**வரலாறு:** அநேக நூற்றாண்டுகளாக அம்தோக்கள் திபெத்-சீன எல்லைப் பகுதிகளைச் சுற்றித் திரிந்தார்கள். துற்கீர்த்தி பெற்ற இவர்களுடைய அச்சமூட்டும் செயல்கள், அழைப்பில்லாமல் இவர்கள் மத்தியில் கடந்து செல்ல முயல்வோருக்குப் பயத்தை உண்டாக்கியது.

**பழக்கவழக்கங்கள்:** ரொங்பா அம்தோக்கள் பெரும்பாலாக வெளியுலகத்தைப்பற்றிக் கவலையில்லாதவர்கள். இவர்கள் திபெத்திய புதுவருடத்தைத் திபெத்திய நாள்காட்டியின்படி (Lunar calendar) பிப்ரவரி மாதம் கொண்டாடுகின்றனர். முந்தைய நாள்களில் குழிப்பேரி (Peach) மரம் பூப்பூத்தவுடன் கொண்டாட்டம் தொடங்கிவிடும். இது சொந்த பந்தங்கள் கூடிக் கடந்த வருடத்தின் நிகழ்வுகளைக் கொண்டாடும் சமயமாகும்.

**மதம்:** ரொங்பா அம்தோக்கள் திபெத்திய தந்திரப் புத்தமதத்தைப் பின்பற்றுகின்றனர். தந்திரத்தின் ஒரு முக்கியத் தனிப்பண்பு காணமுடியா ஓர் உருவத்தை மனதில் தியானிப்பதாகும். தந்திர குரு ஒவ்வொரு மாணவனுக்கும் தியானிக்கும்படி ஒரு தெய்வத்தைத் தருகிறார். இந்தத் தெய்வங்கள் பெரும்பாலாகச் சினங்கொண்ட அல்லது பூத உருவமுடையவை; இவை மாணவனுக்குச் சுதந்திரத்தை (பிறப்பின் சக்கரத்திலிருந்து) அடைய உதவி செய்ய வேண்டியவை. அதைத் தியானிக்கும்போது, தான் அதைப்போலவே மாற முயற்சிக்கிறான். உண்மையில் சில திபெத்திய புத்தமதத்தினர் தாங்கள் இப்பூதங்களை உண்மையாகவே தங்கள் முன் தோன்றச் செய்ய முடியும் எனக் கூறுகின்றனர்.

**கிறிஸ்துவம்:** ரொங்பா அம்தோக்கள் மத்தியில் அறியப்பட்ட நிலையில் பத்துக் கிறிஸ்துவர்கள் மட்டுமே இருக்கின்றனர். இந்த இனத்தவர்கள் தங்கள் மத்தியில் சுவிசேஷத்தைக் கொண்டுவருவது கடினம் என நிரூபித்துள்ளனர். மிஷனெரி சகாப்தத்தில் (இது சீனாவில் கி.பி. 1949 ல் கம்யூனிஸ்ட் ஆட்சி வரும்வரை நிலைத்திருந்தது) தி கிறிஸ்டியன் அண்ட மிஷனெரி அலையன்ஸ் (The Christian and Missionary Alliance) இப்பகுதியில் (குறைவான) பணியாளர்களைக் கொண்டிருந்தது; ஆனால் ரொங்பா அம்தோக்கள் மத்தியில் மிகக்குறைவானப் பணி மட்டுமே செய்யப்பட்டது. கடந்த சில வருடங்களாகச் சீன ஜெபவீடுகள் இவர்கள் மத்தியில் சுவிசேஷகர்களை அனுப்பிவைத்துள்ளன; இருந்தும் குறைவான பலனையே கண்டுள்ளன.




**Population:**
127,000 (2000)
156,500 (2010)
192,700 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** 10

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Rongba , Rongpa

**மக்கள்தொகை:** 97,600 (1987, Language Atlas of China)

**மொழி:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, போதி, போதிஷ், வடக்கு திபெத்திய மொழிகள்

**மொழி வழக்குகள்:** 2

**புத்த மதத்தினர்:** 99%

**கிறிஸ்துவம்:** 0.1%

**வேதாகமம்:** சில பகுதிகள் கி.பி. 1862, புதிய ஏற்பாடு கி.பி. 1885, திபெத்திய பைபிள் கி.பி. 1948

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL குறியீடு : ADX02

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்